நிதியாண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டத்திலிருந்து 7 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்படும். இச்சாலைப் பணி இந்த ஆண்டே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது 5 ஆண்டு காலத்திலே கிட்டத்தட்ட 65,134 கிலோ மீட்டர் நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் காலத்திலே 56,925 கிலோ மீட்டர் நீள சாலைகள் இன்றைக்கு சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகம், பேரூராட்சி, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாக இருந்தாலும் அதையும் சேர்த்து இன்றைக்கு அதிகமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைகளெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

159—

சட்டக் கல்லூரி

***13568—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஈரோட்டிலே புதிய சட்டக் கல்லூரி திறக்க வேண்டுமென்ற கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும். இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்” என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். இங்கே மகராசி வழிவந்த முகராசிக்காரர், மமதை என்பதே இல்லாத மழலைச் சிரிப்புக்காரர், கருணைத் தாய் வழிவந்த கைராசிக்காரர், காவேரி காப்பாளர், ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளைத் தந்த மாமனிதர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். தென்பாண்டிச் சிங்கம், மனிதநேயப் பண்பாளர், ஜல்லிக்கட்டு நாயகன், தேனி தந்த தங்க மகன் மாண்புமிகு அண்ணன் துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “சட்டம் ஒரு இருட்டறை, வக்கீலின் வாதம்தான் விளக்கு” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழ்நாட்டில் 14 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பதினைந்தாவதாக ஈரோடு கிழக்கு தொகுதியில் ஒரு சட்டக் கல்லூரி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 23]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபோது தமிழகத்திலே 7 சட்டக் கல்லூரிகள் இயங்கி வந்தன. இந்த 4 ஆண்டுகாலத்திலே கூடுதலாக 6 புதிய சட்டக் கல்லூரிகளும், சென்னையிலிருந்த சட்டக் கல்லூரி மூடப்பட்டதன் காரணமாக, 2 புதிய சட்டக் கல்லூரிகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு நகரத்திலே சட்டக் கல்லூரி வேண்டுமென்று சொல்கின்றார். சேலத்திலும், நாமக்கல்லிலும் புதிதாக சட்டக் கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அங்கு தனியார் சட்டக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆக, 4 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, ஈரோட்டிலே இந்த ஆண்டு புதிதாக சட்டக் கல்லூரிகள் திறப்பதற்கான எந்தக் கருத்துருவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்து, வருங்காலத்திலே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு கிழக்கு தொகுதியில் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் இருக்கிறது, மாநகராட்சி அலுவலகம் இருக்கிறது, மாவட்ட நூலக அலுவலகம் இருக்கிறது, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் இருக்கிறது, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் உள்ளன. கோபி, சத்தியமங்கலம், பவானி, அந்தியூர், பெருந்துறை, கொடுமுடி, ஈரோடு ஆகிய பகுதிகளில் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஈரோட்டில் மட்டும் 1,200 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். மேலும், சட்டப் படிப்பு படிக்க வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தூரம் உள்ள கோவைக்கு செல்ல வேண்டும். சேலத்திற்கு செல்ல வேண்டுமென்றால் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். நாமக்கல்லுக்கு செல்வதற்கு 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, தந்தை பெரியார் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா வளர்ந்த மண், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எஃகுக் கோட்டையாக இருந்த ஈரோடு கிழக்குத் தொகுதியில் சட்டக் கல்லூரி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. சி.வி சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஈரோடு ஒரு முக்கியமான நகரம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கடந்த ஆண்டுதான் ஈரோடு நகரைச் சுற்றியிருக்கிற பகுதியான சேலத்தில் ஒரு புதிய சட்டக் கல்லூரியும், நாமக்கல்லில் ஒரு புதிய சட்டக் கல்லூரியும் என ஒரே ஆண்டில், அவருடைய பகுதியிலே 2 சட்டக் கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அந்தக் கோரிக்கை, வருங்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பினால், சட்டக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில், தனியாரே சட்டக் கல்லூரியை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்கள் யாராவது முன்வருவார்களானால், சட்டக் கல்லூரி அமைக்க அனுமதியளிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய பின்தங்கிய வேலூர் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டம், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டம், இராணிப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டம் என மூன்று மாவட்டங்களாகப் பிரித்து சாதனை படைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அதுமட்டுமல்லாமல், இளம் வழக்கறிஞர்களுக்கு 2

2020 மார்ச் 23]

ஆண்டுகளுக்கு, மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் உதவித் தொகை வழங்கியது மட்டுமல்லாமல், அரக்கோணம் நகரிலே ஒரு மாவட்ட கூடுதல் நீதிமன்றமும் வழங்கியதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தொகுதி மக்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். புதியதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஆகவே, இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டையில் சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்கின்றார். மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், தருமபுரி மற்றும் விழுப்புரம் போன்ற வட மாவட்டங்களில் மட்டும் புதிதாக 2 சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், சென்னையில் நடைபெற்ற கல்லூரி மூடப்பட்டதன் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பட்டறைப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பாக்கம் என மொத்தம் 4 சட்டக் கல்லூரிகள் வட மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற வேலூர் மாவட்டம், இப்பொழுதுதான் 3 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி தற்போது இயங்கிவருகிறது. எதிர்காலத்தில் தேவை ஏற்படும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை

வணங்குகிறேன். அன்பின் உருவாய், ஆற்றலின் சின்னமாய், இயற்கையின் தோற்றமாய், ஈகையின் இருப்பிடமாய் விளங்கும் ஒன்றே செய்வோம், நன்றே செய்வோம், அதுவும் இன்றே செய்வோம் என்பதுபோல காவேரி டெல்டா மாவட்ட மக்களின் பாதுகாப்புக்கு சட்டம் இயற்றிய எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலைமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கின்ற மாணவர்கள் சட்டக் கல்லூரியில் பயில வேண்டுமென்று சொன்னால், வேலூர் அல்லது விழுப்புரத்திற்குச் செல்லவேண்டிய நிலை இருக்கின்றது. ஆகவே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரி துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு புதிதாக சட்டக் கல்லூரி வேண்டுமென்று கோருகிறார். இதற்கு முன்பு திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் சட்டக் கல்லூரியில் பயில வேண்டுமென்றால், செங்கல்பட்டு, பாண்டிச்சேரி அல்லது சென்னைக்கு சென்றுகொண்டிருந்தார்கள். அந்த நிலையைப் போக்க வேண்டும் என்பதற்காக மிகவும் பின்தங்கிய மாவட்டமான விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டத்தை உள்ளடக்கிய விழுப்புரம் நகரத்தில் 77 கோடி ரூபாய் மதிப்புள்ள உலகத் தரம் வாய்ந்த ஒரு சட்டக் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்திருக்கின்றார்கள். ஆகவே, வருங்காலத்தில் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று சட்டக் கல்லூரி திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

2020 மார்ச் 23]

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், தமிழகத்தை ஆறு முறை ஆட்சி செய்து, ஏழை, எளிய மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைத் தந்து மறைந்தும், மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருபெரும் தலைவர்களின் ஆசியோடு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோவை மாவட்ட மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களைப் பெற்றுத் தந்து உள்ளாட்சியிலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட துடியலூர், கவுண்டம்பாளையம், வடக்குத் தொகுதிக்குட்பட்ட வீரகேரளம், வடவள்ளி உள்ளிட்ட இரண்டு தொகுதிகளிலும் பாதாள சாக்கடை அமைப்பதற்கு விதி 110–ன்கீழ் ரூ.610 கோடி ஒதுக்கீடு செய்து தந்ததற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய இரண்டு தொகுதி மக்களின் சார்பாகவும், எங்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு புதியதாக அரசு சட்டக் கல்லூரி ஒன்றை அமைத்திட நமது மாவட்ட மண்ணின் மைந்தர் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய மாவட்டத்திற்கு புதிய சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இதுவரை, விழுப்புரம், திருவண்ணாமலை, அரியலூர், பெரம்பலூர் போன்ற மிகவும் பின்தங்கிய வட மாவட்டங்களிலிருந்து சட்டக் கல்வி பயில வேண்டுமென்றால், சென்னைக்கோ, புதுச்சேரிக்கோ செல்ல வேண்டிய நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, மிகவும் பின்தங்கிய மாவட்டமான விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த சட்டக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டு காலமாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கள்ளக்குறிச்சி மாவட்டம் தற்போதுதான் பிரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் judicial மாவட்டம் பிரிக்கப்படவில்லை, மாவட்ட நீதிமன்றம் இன்னும் அமைக்கப்படவில்லை. Judicial மாவட்டம் பிரித்து, மாவட்ட நீதிமன்றம் அமைந்த பிறகு, தேவையின் அடிப்படையில், வருங்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தில் மக்களாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு மாவட்ட அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

திருப்பூர் மாவட்டம், பிரசித்த பெற்ற பனியன் தொழிலால் ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 35,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் நகரமாக உள்ளது. திருப்பூர் மாவட்டத்திற்கென்று அரசு சட்டக் கல்லூரி இல்லை. எனவே, திருப்பூர் மாவட்டதில் இந்த ஆண்டே சட்டக் கல்லூரி ஒன்றை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2020 மார்ச் 23]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருப்பூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புதிதாகத் திறக்கப்பட்ட 6 சட்டக் கல்லூரிகளில், மேற்கு மாவட்டத்தில்தான் 2 புதிய சட்டக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. ஒன்று சேலம் மாவட்டத்திற்கும், மற்றொன்று நாமக்கல் மாவட்டத்திற்கும் கொடுத்திருக்கின்றார்கள். இந்த ஆண்டு புதிய சட்டக் கல்லூரிகள் திறப்பதற்கான வாய்ப்பு இல்லை. வருங்காலத்தில் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவேரி காப்பாளர், ஜல்லிக்கட்டு நாயகன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு சார்பு நீதிமன்றம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. குமரகுரு): வினா வரிசை எண் 160, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.